RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1867

OPEN ACCESS

# தேவேந்திரகுல வேளாளர் - இதழியல் பதிவுகளும் இனவரைவியல் கோட்பாடும்

**இரா. அனிஸ்பாண்டியன் [அ, *], அ. செல்லப்பா [அ]**

[அ] வெ.ப.சு. தமிழ் உயராய்வு மையம், ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி- 627010, தமிழ்நாடு, இந்தியா.

# Devendrakula Vellalar Journalism Records and Ethnographic Theory

**R. Anishpandian [a, *], A. Chellappa [a]**

[a] Department of Tamil, MDT Hindu College-627010, Tirunelveli, Tamil Nadu, India

* Corresponding Author: tamildeptkvp@gmail.com

Received: 15-08-2022
Revised: 29-10-2022
Accepted: 17-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

A man is strong in society because of his protective, mentality. Throughout human history, defensive behavious and instinct have kept humanity constantand grouring. In the battle for life that human face, revolutions are inevitable class conflicts. protests and revolutionsin human society bring about a dynamic transformation. The foundation of racial representation, tenacity and flight. Which in fact make thehuman race vibrant and multiplay, is formed by revolution, conflict, creative and critical literature. The literature has the ability to bring revolution more than any other weapon, according to the current educated culture.

**Keywords:** Devendrakula Vellalar, Socity, Behavious, Transformation

## முன்னுரை

தொன்மைச் சிறப்புமிக்க பூர்வக்குடி மள்ளர் (தேவேந்திரகுல வேளாளர்) சமூகத்தின் மறைக்கப்பட்ட உண்மை வரலாற்றை தோண்டியெடுத்து உலக வரலாற்றுத்தளத்தில் அறிமுகப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இத்தகைய பணியை தற்காலத்திய மரபு ஊடகங்களும், நவீன ஊடகங்களும் செய்யத் தொடங்கியிருப்பது உண்மையான வரலாற்று தளத்திற்கு வலுச்சேர்ப்பதாய் அமைகின்றன. இன்று இனம் சார்ந்த அரசியலும், முன்னெடுப்புகளும் என்று சொல்வதைவிட சாதிச்சார்ந்த அரசியலும், முன்னெடுப்புகளும் என்று சுட்டுவதுதான் பொருத்தமாக இருக்கும். இன்றைய ஊடகங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.

## தமிழக ஊடகப் போக்குகள்

தமிழக ஊடகங்களான நாளிதழ், வார இதழ், மாத இதழ், வானொலி, தொலைக்காட்சி, கைபேசி, இணையதளப் பயன்பாடு, இலக்கியம் போன்றவை இன்றைய தமிழ்வெளியில் சாதி, அரசியல், மதம், மொழி, சார்ந்தே கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. ஒற்றைக் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் கொண்ட தமிழகத்தை ஆரியர் படையெடுப்புகளும், அண்டை அயலவர் படையெடுப்புகளும், அயல்நாட்டினர் படையெடுப்புகளும் பன்முகத்தன்மை கொண்ட பண்பாடுகள், கலாச்சார கலப்பு வெளியாக மாற்றியிருக்கின்றன. இதனால் பூர்வக்குடி மக்களின் உண்மையான கலாச்சாரமும், பண்பாடுகளும்,

வரலாறும் மறைக்கப்பட்டிருக்கின்றன. ஓரினத்தை அழிக்க வேண்டுமென்றால், முதலில் அவர்களின் மொழியை அழித்தாலே போதும் என்பதுபோல, ஒரு சமூகத்தை அழிக்க அவர்களின் வரலாற்று ஆவணங்களையும், படிமங்களையும் அழித்தாலே போதும். அவர்கள் தானாகவே அனைத்தையும் இழந்து அடிமை ஆகிவிடுவார்கள் என்பது தமிழக வந்தேறிகளின் கொள்கையாக இருந்திருக்கின்றன. இவர்களின் இத்தகைய நிலைப்பாடும் கொள்கையும்தான், இங்கே வாழும் பூர்வக்குடி மக்களை ஊமையாக்கியிருக்கின்றன. உண்மையான பூர்வக்குடி மக்களான மள்ளர் போன்றோர் அனைத்தும் இழந்து நிற்க, படையெடுப்புகளால் குடியேறிய சிறு அளவிலான குழுக்களே இன்று தமிழகத்தை ஆளும் தகுதியை தக்க வைத்துள்ளன. இக்குழுக்களே ஊடகங்கள் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டு மக்களை சிந்திக்க திறனற்றவர்களாய் அமுக்கி வைத்திருக்கின்றன. வரலாறு எப்போது ஒரே நிலையில் நகர்வதில்லை. அது 1000 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது பின்னோக்கிப் பார்த்து மீண்டும் பழைய வரலாறோடு கைக்கோர்க்கும் என்ற அறிஞர்களின் கூற்றுகளின்படி, இன்று தமிழகத்தின் தொல்குடிகள் பல தங்களது வரலாற்றையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், அரசியலையும் பின்னோக்கிப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். இத்தகைய நிலையில்தான் 'கவிக்கோ அப்துல் ரகுமான்'- மள்ளர்களாகிய பள்ளர்களைப் பற்றி "மருத நிலத்தில் வாழ்ந்த பள்ளர்கள்தான் முதன்முதலில் விவசாயம் செய்தனர். இந்தப் பரம்பரையில்தான் நாம் அனைவரும் வந்துள்ளோம்" என்று எடுத்துக்கூறி மள்ளர்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவு கூர்கிறார். தினமலர் நாளிதழ் மள்ளர்களைப் பற்றி இன்று கிடைக்கும் கல்வெட்டுகளின் ஆவணங்களின்படி "....பள்ளர் வரலாற்றைக் காண்போம். பள்ளர் குலத்தை சிலர் தாழ்ந்த குலத்தோர் எனக்கருதுகின்றனர். இது வரலாற்றுக்குப் புறம்பான கருத்து. பள்ளர்கள் சமுதாயத்தினர் உயர்நிலை வகிக்கின்றனர் என்று கல்வெட்டு வாயிலாக அறியலாம். குறிப்பாக சோழ மன்னர்கள் காலத்தில் பல இடங்களில் அவர்கள் குறுநிலத் தலைவர்களாக திகழ்ந்துள்ளனர். பள்ளர்களில் ஆண்கள் மட்டும் அல்ல பெண்களும் நிலச்சுவான்தார்களாக இருந்திருக்கின்றனர். தாங்களே தானம் செய்யும் உரிமையும் பெற்றிருந்தனர். தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவிலடி என்னும் கிராமத்தில் ஒரு பெண் பள்ளி குறிக்கப்படுகிறாள். அவ்வூர் திருவிழாவுக்கு இவள் நிலம் அளித்து இருக்கிறாள் அதை கல்வெட்டு தெரிவிக்கிறது.... மேலும் நாடுகாப்பாராகவும் வீரர்களாகவும் இவர்கள் வாழ்ந்தனர் என்பதும் நிலச்சுவான்தார்களாக, செல்வந்தர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதும் தெளிவாகிறது. பெண்களும் கல்வி கற்றவர்களாகவும் நிலம் கொள்ளும் உரிமையும், கொடுக்கும் உரிமையும் பெற்றிருந்தனர் என்பதும் உறுதியாகிறது" என்று குறிப்பிடுகிறது. இன்று பொது ஊடகங்களும் மள்ளர்களின் (தேவேந்திரர்குலம்) வரலாற்றையும் பண்பாட்டையும் பின்னோக்கி ஆராய முற்படுகின்றன (Parameshwari, 2000). ஆனால் எல்லா ஊடகங்களும் இவ்வாறு தமிழகத்தின் தொல்குடி மக்களைப் பற்றி ஆராய முற்படுவதில்லை. காரணம் அவைகளில் பெரும்பாலானவை அரசியல் சார்பு, மதச்சார்பு, சாதிச்சார்பு, பிறமொழிப் பண்பாட்டுச் சார்பு போன்ற சிந்தனை வட்டங்களில் கட்டமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தின் தொன்மையான கட்டுமானத்தை இன்று தோலுரித்துக் காட்டினால், தங்களது ஆட்சிக்கும், திராவிட கோட்பாட்டுச் சிந்தனைக்கும் எதிராக ஓர் எழுச்சி ஏற்பட்டு விடக்கூடாது என்பதில், இத்தகைய ஊடகங்கள் கவனமாக இருக்கின்றன.

தமிழகத்தில் செயல்படும் ஊடகங்கள் அனைத்தும், தொன்மையான தமிழர் பண்பாட்டையும், வரலாற்றையும், அரசியல் சிந்தனையையும், அறச்சிந்தனையையும் மீட்டுருவாக்கம் செய்வதற்காக செயல்படவில்லை. மாறாக, தமிழர் கலாச்சாரப் பண்பாட்டைச் சீரழிக்கவும், தங்களது வியாபாரத்தைப் பெருக்கவும், தங்களது அரசியல் வாக்கு வங்கிகளைப் பெருக்கிக் கொள்ளவும், வன்முறையைத் தூண்டி சாதி, மத இடைவெளியை பொதுப்படுத்தவும், மூடநம்பிக்கைக்கு ஆதரவான கருத்தியலை பலப்படுத்தி, பெண்களை சிந்திக்க விடாமல் செய்யவும், மது, மாது, போன்ற கவர்ச்சியானக் கருத்தியலைப் பரப்பி இளைஞர்களை எழுச்சிப் பெறவிடாமலும் செயல்பட்டு வருகின்றன. நமது பண்பாடுக் கலாச்சாரத்தை சிதைத்து அந்நியப் பண்பாடுகளைத் திணித்து வருகின்றன. குறிப்பாக, தமிழகத்தின் தொல்குடி மக்களான மள்ளர் போன்றோர்களுடைய தொன்மை வரலாற்றையும், பண்பாட்டையும் மறைப்பதில் முனைப்பு காட்டுகின்றனவோ என்ற ஐயம் வலுவடைந்து வருகிறது.

## மள்ளர் விழிப்புணர்வு ஊடகங்களும் செயல்பாடுகளும்

தொன்மை காலம் முதல் கி.பி. 14 ஆம் நூற்றாண்டுகள் வரை வேந்தர்களாகவும், வீரர்களாகவும் நிலக்கிழார்களாகவும், செல்வந்தர்களாகவும், அறச்சிந்தனை கொண்டவர்களாகவும், பண்பாடுகளை உருவாக்குபவர்களாகவும், நெல் நாகரிகத்தையும், நீர் மேலாண்மையையும் தோற்றுவித்தவர்களாகவும், நாகரிகத்தை படைத்தவர்களாவும் திகழ்ந்த மள்ளர் மரபினர் (தேவேந்திரகுல வேளாளர்கள்), தெலுங்கர்களான விஜயநகர அரசுகளின் படையெடுப்புகளுக்குப் பிறகு அனைத்தையும் இழந்தனர். குறிப்பாக மள்ளர்களின் பழமையான பண்பாடு, வரலாற்றுச் சிறப்பைத் தாங்கி நின்ற ஆவணங்களை அழிப்பதில் விஜயநகர அரசர்கள் வேகமாக முனைப்புக் காட்டினர். இதனால் காலப்போக்கில் மள்ளர் மரபினர் தங்களது வரலாறு தெரியாமலேயே அனைத்தும் இழந்தவர்களாய் தவித்தனர். ஆனாலும் வரலாற்றை யாரும் முழுமையாக அழித்து விடமுடியாது என்பதால், இன்று செப்பேடுகள், கல்வெட்டுகள், கோவில் கல்வெட்டுகள், இலக்கியங்கள், அரசு பதிவு ஆவணங்கள், நாட்டுப்புறவியலில் தொக்கி நிற்கும் மள்ளர் மரபு படிமங்கள், தொல்பொருட்கள் போன்றவற்றில் காணப்படும் ஆதாரங்கள் மூலம் மள்ளர் மரபினர் இன்று தங்களது தொன்மையான வரலாற்றை மீட்டுருவாக்கும் செய்யும் முயற்சியில் வேகம் காட்டி வருகின்றனர். இத்தகைய முயற்சியை தொடங்கி வைத்ததில் முனைவர். தேவ ஆசீர்வாதம், முனைவர் குருசாமி சித்தர், முனைவர் ஞானசேகரன், முனைவர் செந்தில் மள்ளர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். மள்ளர் மரபினர்களின் அரசியல், பண்பாடு, கலாச்சாரம், வரலாறு, இலக்கியம், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை சார்ந்து இன்று வெளிவரும் மள்ளர் ஊடகமான தொலைக்காட்சி, இதழ்கள், இலக்கியப் படைப்புகள், கலைப்படைப்புகள் போன்றவை மள்ளரியம் சார்ந்த ஆய்வுகளை ஆதாரப்பூர்வமாக வெளிக்கொண்டு வருகின்றன.

முனைவர். குருசாமி சித்தர் வெளியிடும் 'மள்ளர் மலர்', எஸ்.உமாசங்கர் வெளியிடும் 'மருத மலர்', பூ.சுந்திரபோசு, நமசு, வை.தேவதாசு, வீ.பி.வேல்முருகன், மு.கா.வையவன் ஆகியோர் சேர்ந்து வெளியிடும் 'மாற்றம்' பேராசிரியர். இ.பேச்சிமுத்து வெளியிடும் 'மருதம்' இதழ் மற்றும் தொலைக்காட்சி, பேராசிரியர் முனைவர் மாமள்ளன் வெளியிடும் 'வெல்க தமிழர் முழக்கம்' முனைவர் செந்தில் மள்ளர், வடிவேல் இராவணன், சண்முகபாரதி வெளியிடும் 'மண்ணுரிமை' இரா.முத்துமணி தேவேந்திரர் வெளியிடும் 'மள்ளரியம்' ம.தங்கராஜ் வெளியிடும் 'தேவேந்திரர் மலர்' , வே.இரத்தினராஜ் வெளியிடும் 'களஞ்சியம்' போன்ற இதழ்கள் மள்ளர்களின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், விழிப்புணர்வுக்கும் தூண்டுகோலாக இருந்து வருகின்றன.

தேவேந்திரகுல வேளாளர்களின் தொன்மையான வரலாற்றை செப்பேடுகள், கல்வெட்டுகள், அரசு ஆவணங்கள், தொல்பொருள்கள், இலக்கியங்கள், நாட்டுப்புறப்பாடல்கள், வரலாற்றுச் செய்திகள், கோயில்களில் உள்ள உரிமைகள், மடங்கள், போன்றவைகளின் மூலமாக மேற்கண்ட இதழ்கள் ஆதாரபூர்வமாக மள்ளர் சார்ந்த செய்திகளை வெளியிடுகின்றன. மேலும் தேவேந்திர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் சார்ந்த விழிப்புணர்வையும் ஊக்கத்தையும் இத்தகைய இதழ்கள் ஏற்படுத்தி வருவதை அறிய முடிகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்புவரை தேவேந்திரர்களுக்குள் இருந்த அரசியல் ஆளுமை இன்றைய அரசியலில் எவ்வாறு மறுக்கப்பட்டு வருகிறது என்பது பற்றிய கருத்தியலையும் புள்ளி விபரங்களுடன் இவ்விதழ்கள் மள்ளர்களிடையே பரப்பி வருகின்றன.

மள்ளர்கள், இந்திரகுல மரபை சேர்ந்தவர்கள் என்பதால், இன்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வரும் அவர்களை தேவேந்திரகுல வேளாளர் என்னும் ஒற்றைப் பெயரில் அரசு அழைத்திட வேண்டியும், ஆணையிட வேண்டியும் இவ்விதழ்கள் குரல் கொடுத்து வருகின்றன. பல நூற்றாண்டுகளாக அரசியல் ஆளுமையிலிருந்து ஓரங்கட்டப்பட்டிருக்கும் மள்ளர்களுக்கு, அரசியல் சார்ந்த புரிதலையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி அரசியல் ஆளுமையை தொன்மைகாலம் போல மீண்டும் மள்ளர்களுக்குள் கொண்டுவர இவ்விதழ்கள் குரல் கொடுத்து வருகின்றன. சொற்ப அளவிலேயே இருக்கும் அந்நியர்களிடமிருந்து அரசியல் உரிமையையும், மண்ணுரிமையையும் மீண்டும் மீட்டெடுக்க இவ்விதழ்கள் போராடி வருகின்றன. இந்திய அளவில் அரசின் அட்டவணை பிரிவினரை தாழ்வாக கருதும் சிந்தனை இருப்பதால், தங்களை அட்டவணை பிரிவினரிடமிருந்து பிரித்து, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினராகவோ அல்லது, வேளாண் மரபினர் என்ற

தனிப்பிரிவாகவோ அழைத்து உரிமைகளை வழங்கிட இவ்விதழ்கள் போராடி வருகின்றன. தேவேந்திரர்களின் வாழ்வியல் பண்பாடுகளையும், சடங்குகளையும், வழிபாட்டுப் பண்பாடுகளையும் பறைசாற்றும் புதுக்கவிதைகளையும், கட்டுரைகளையும், நாட்டுப்புறப்பாடல்களையும், இவ்விதழ்களில் காண முடிகிறது. இதன்மூலம் மள்ளரிய படைப்பாளர்களை உருவாக்குவதில், இவ்விதழ்கள் முனைப்புக் காட்டுவதையும் அறிய முடிகிறது.

தாய்மொழியை பாதுகாத்தால், அவ்வினத்தையும் பாதுகாக்க முடியும் என்ற மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில், தேவேந்திரர்களின் தாய்மொழியான தமிழைப் பாதுகாக்கவும், தமிழ்மொழி வளர்ச்சிக்கு தடையாக நிற்கும் காரணிகளைத் தகர்க்கவும் இவ்விதழ்கள் ஓங்கிக் குரல் எழுப்புகின்றன.

தேவேந்திரர் விழிப்புணர்வு இதழ்களில் 'மாற்றம்' போன்ற இதழ்கள் பொதுவுடைமைத் தத்துவத்தையும் பட்டியல் இன இட ஒதுக்கீட்டையும், தலித்திய ஒற்றுமையையும், பெரியாரிசம், அம்பேத்காரிசத்தையும், மொழியுணர்வையும் ஆதரித்து தனது கருத்தியல் உத்தியை முன்னெடுக்கின்றன. அதேநேரத்தில் தேவேந்திரர் விழிப்புணர்வு பத்திரிக்கைகள் பல மள்ளர்கள் உள்ளடக்கிய 'தலித்து' என்னும் சொல்லாடலை எதிர்க்கின்றன. மள்ளரியம் சார்ந்த அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு உள்ளடக்கிய கருத்தியலை மட்டும் முன்னிலைப் படுத்துகின்றன. மேலும் சேர, சோழ, பாண்டியர் பரம்பரையினரில் திறம்பட ஆளுமை செலுத்திய மள்ளர் வேந்தர்களையும் வீரர்களையும் வகைப்படுத்தி, அவர்களின் சிறப்பை எடுத்துரைக்கின்றன. குறுநில வேந்தர்களான மள்ளர்களை எடுத்துரைத்து புகழ்கின்றன. சுதந்திரப் போராட்ட வீரர்களான வெண்ணிக்காலாடி, மாவீரன் சுந்தரலிங்கம் போன்றோர்களின் வீரத்தையும், தியாகத்தையும் தேவேந்திரர்களுக்கு இவ்விதழ்கள் எடுத்துரைக்கின்றன. சமூக விடுதலைப் போராளிகளான தேக்கம்பட்டி பாலசுந்தர்ராசு, தியாகி இம்மானுவேல் சேகரனார் போன்றோர்களின் தியாகத்தையும் சமூக விடுதலைக்கான போர்க்குணத்தையும் இவ்விதழ்கள் மையப்படுத்தி தேவேந்திரர்களிடம் ஒருங்கிணைப்பையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தி வருகின்றன.

தேவேந்திரர்களை 'பள்ளர்' என்று அழைக்கும் வழக்கத்தை நாயக்கர் மன்னர்களே ஏற்படுத்தினர் என்றும், மள்ளர், மல்லர், குடும்பர் தேவேந்திரர் என்பதே இவர்களின் உண்மையான இனப்பெயர் என்றும், மள்ளர்களின் பண்பாடு, கலாச்சாரம், வரலாற்றை அழித்து, அவர்களிடமிருந்து நிலங்களையும், அரசியல் ஆளுமையையும் கைப்பற்றுவதற்காக, நாயக்க மன்னர்கள் செய்த சூழ்ச்சி என்றும், பல்வேறு ஆவணங்களை எடுத்துக்கூறி இவ்விதழ்கள் தம்முடைய மள்ளரியம் சார்ந்த கருத்தியலுக்கு வலுச் சேர்க்கின்றன. நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்ற பழமொழிக்கு ஏற்ப, இன்று தமிழகமெங்கும் பரவிக்கிடக்கும் எண்ணற்ற பள்ளு இலக்கியங்களை எடுத்துரைத்து, அதன் கருப்பொருளையும் தேவேந்திரர்களுக்கு உணர்த்துகின்றன. பொதுவாகவே தமிழகமெங்கும் பரவிக்கிடக்கும் பள்ளு நூல்கள், தேவேந்திரர்களின் உண்மையான பெயரான மள்ளர், மல்லர் போன்ற உண்மையான அடையாளப் பெயர்களை மறைத்து, அவர்களை பள்ளர் என்று வேறு பெயரில் அழைத்து அவர்களின் உண்மையான வரலாற்றையும் பண்பாட்டையும் மறைக்கும் பொருட்டு 'பள்ளேசல் நூல்களாக' நாயக்கர் மன்னர்களால் நயவஞ்சகமாக எழுதப்பட்டன என்ற கருத்துப் பார்வையும் இவ்விதழ்களில் காணப்படுகின்றன. அதேநேரத்தில் இதுகுறித்து தேவநேயப்பாவாணர், பள்ளர் என்றால், பள்ளமான, செழிப்பான மருதநிலத்தில் விவசாயம் செய்யக் கூடியவர்கள் என்றும் 'பள்ளர்' என்பது பேச்சு வழக்கு என்றும், மள்ளர், மல்லர் என்பது செய்யுள் வழக்கு என்றும், எனவே பள்ளர், மல்லர், மள்ளர் என்ற சொற்களெல்லாம் தேவேந்திரகுல வேளாளர்களைக் குறிக்கும்" என்றும் விளக்கம் தருகிறார். இக்கருத்தியலை தேவேந்திரர் விழிப்புணர்வு இதழ்கள் பலவற்றில் காணமுடிகிறது. இவ்வாறு சமூக, அரசியல், பொருளாதாரம், பண்பாடு, மொழி, இலக்கியம், மரபு சார்ந்த தேவேந்திரர்களாகிய மள்ளர்கள் பற்றிய பதிவுகள் எந்தெந்த? இதழ்களில் எவ்வாறு? காணக்கிடக்கின்றன என்பதை ஆராய்வோம்.

## தேவேந்திரர்கள் குறித்த 'மள்ளர் மலர்' இதழ் பதிவுகள்

தேவேந்திரர்கள் பற்றிய ஆய்வு மற்றும் விழிப்புணர்வு இதழ்களில் 'மள்ளர் மலர்' சிறப்பிடம் பெறுகிறது. முனைவர் குருசாமி சித்தர் வெளியிடும் இவ்விதழில் தேவேந்திரர்கள் பற்றிய முழுமையான ஆய்வுக் கட்டுரைகளும், செய்திகளும், இடம்பெறுகின்றன. இவ்விதழில் வெளிவந்த 'சாதியின் தோற்றமும் வளர்ச்சியும்' என்று முனைவர் தே.ஞானசேகரன் எழுதிய கட்டுரையில், தமிழகத்தில் சாதிய அமைப்பு இல்லை என்றும், வட இந்தியர்களின் வருகைக்குப் பிறகுதான் அவர்கள் அறிமுகப்படுத்திய நான்குவகை நிறப்பேத அடிப்படையில் சாதி என்னும் கட்டமைப்பு உருவாகியது என்கிறார். மேலும் 'சூத்திரர்' என்னும் கடைநிலை சாதியத்தைக் குறிக்கும் வார்த்தையையும் அவர்களே அறிமுகப்படுத்தினர் என்கிறார். மனித வர்க்கப்போராட்ட வாழ்க்கைத்தளத்தில், வென்றவர் உயர்ந்தவர் ஆகிறார். தோற்றவர் அவருக்கு அடிமையாகிறார். வெற்றித் தோல்விகள் நிரந்தரமானது அல்ல. எனவே இன்று கடைநிலையில் வாழ்பவர் முன்பு உயர்ந்த நிலையில் வாழ்ந்திருப்பார். இன்று தாழ்நிலையில் வாழும் தேவேந்திரர்கள் முன்பு வேந்தர்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழ்ந்தார்கள் என்பதைதான், இன்றைய தேவேந்திரர்கள் பற்றிய ஆய்வும் உரைக்கிறது. தமிழகத்தில் எத்தனையோ சாதிகள் இருக்க மள்ளர்களாகிய தேவேந்திரர்களைப் பற்றி மட்டுமே சங்க இலக்கியங்களும் பள்ளு இலக்கியங்களும் பேசுவது இங்கே சிந்திக்கத்தக்கதாகும். இக்கருத்தை தே.ஞானசேகரனும் "...எத்தனையோ சாதிகள் தமிழகத்தில் இருக்க பள்ளர்களை மட்டுமே தூக்கிப் பிடிக்கும் ஏராளமான (100-க்கும் மேல்) பள்ளு நூல்கள் தோன்றக் காரணமென்ன? இவர்களிடம் சமரசம் செய்து கொள்வது போன்ற பாவனையுடன் கூடிய ஐந்து மதக் கருத்துகள் ஏன் பள்ளு நூல்களில் பேசப்படுகின்றன. இதற்கான விடை நடுநிலைமையாக வரலாற்று ஆசிரியர்களால் கண்டு சொல்ல முடியுமானால் பள்ளர் சமுதாயத்தின் உண்மையான கலாச்சாரப் பண்பாட்டு வேர் மள்ளர் என்ற சங்ககால இனத்திலிருந்து தொடங்குவதைக் காட்டுவனவாக அமையும்" என்கிறார் (Gurusamy Siththar, 1995). இவை, தேவேந்திரர்கள் பற்றிய கருத்தியலை முன்னெடுக்கின்றன. இவ்விதழில் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய பதிவில், கட்டபொம்மனுடன் இருந்த பலரும் அவரை விட்டு விலகி ஓடி விட, அவர்கூடவே இருந்து அவருக்காகவும், நாட்டுக்காகவும் தற்கொலைப் படைத்தளபதியாக மாறி உயிர்த்தியாகம் செய்த வீரர் சுந்திரலிங்கத்தின் வரலாறு நினைவுக்கூறப்படுகிறது. இதேஇதழில் - தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழிய மள்ளரின் வரலாறும் இடம் பெறுகிறது. குடிமக்களுக்கு வாரி வாரி வழங்கியதாலும், நீதி தவறாத செங்கோலாட்சி நடத்தியதாலும், பொதுமக்களால், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி (குடுமி தேவேந்திர மரபினரைக் குறிக்கும் சொல்) என்று அன்புடன் அழைக்கப்பட்டார். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவெழுதிக்கும் பெருமள்ளத்தியார் கோப்பெருந்தேவிக்கும் பிறந்தவர் தான் மதுரையை ஆண்ட நெடுஞ்செழிய மள்ளராவார். இவர் தமிழைப் பாதுகாப்பதற்காக தமிழ்ச் சங்கத்தை வளர்த்தார். மதுரை உள்ளடக்கிய பாண்டிய நாட்டில் நல்லாட்சி செய்தார். இதனால் பொறாமைக் கொண்ட மன்னர்களான மாந்திரஞ்சேரல் இரும்பொறை மள்ளர் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவ மள்ளர் ஐம்பெரும் வேளிர்களான திதியன் மள்ளர், தகடூர் மன்னர் - எழினி மள்ளர், புலியை வென்ற புலிகடிமால் இருங்கோவேள் மள்ளர், மைசூரை ஆண்ட எருமையூரன் மள்ளர், மள்ளர் பொருநன் ஆகியோர் ஒன்று சேர்ந்து பாண்டிய மன்னான நெடுஞ்செழிய மள்ளர் மீது தலையாலங்கானல் என்ற இடத்தில் போர்த்தொடுத்து மோதினர். இக்கடும்போரில் அந்த ஏழு மன்னர்களையும் தோற்கடித்து நெடுஞ்செழிய மள்ளர் வென்றார். தலையாலங்கானல் என்னும் இடத்தில் வென்றதால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழிய மள்ளர் என்று அழைக்கப்பட்டார் என்ற வரலாற்றுச் செய்தியும் இடம்பெறுகிறது. இதன்மூலம் தேவேந்திரர்களின் மறைக்கப்பட்ட வரலாறு வெளிச்சத்திற்கு வருகிறது. இவ்விதழில் தேவேந்திர இலக்கியப் படைப்பாளர்களை உருவாக்கும் வகையில், அவர்களின் கவிதையும் இடம்பெறுகிறது.

"......................

மள்ளர் வாழ்வு மலர

மலர்ந்திட்ட மள்ளர் மலரே

மனதில் மட்டற்ற மகிழ்வுடன் - உன்னை
மனமாற வாழ்த்துகிறேன்

……………………

மாதமொரு இதழாய்
உதிர வைத்துள்ளார்
மதிப்புள்ள எம்தலைவர் - நீ
மன்னர்குல மள்ளர்மலர்
விழிகள் இனிமூடாது
விழித்திருக்கும் நின் வரவுக்காக
வழிகாட்டியாய் இரு - நீ
வழிநடத்திச் செல்வாயாக"

என்ற கவிதை மள்ளர் மலர் இதழ் ஆசிரியரையும் இதழையும் சிறப்பிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

மள்ளர் மலர் இதழ் ஆசிரியரான முனைவர் குருசாமி சித்தர், இவ்விதழில் அரசியல் சார்ந்த கருத்தியலை நுட்பமாக பதிவு செய்கிறார். இங்கே மக்கள் தொகையில் பெரும்பான்மையாக வாழும் மக்கள், அனைத்தையும் இழந்தவர்களாய், தங்களது வாழ்வாதாரங்களை இழந்தவர்களாய் தவித்து நிற்கும்போது, மக்கள் தொகையில் சிறிய அளவில் உள்ளவர்கள் இங்கே ஆட்சியாளர்களாய் இருப்பதும் பெரும்பான்மையான செல்வங்களை தங்களிடத்தே வைத்திருப்பதும் எப்படி என்ற முரண்பாட்டை "சிறிய எண்ணிக்கையுள்ள சாதிகள் தங்கள் விகிதாச்சாரத்திற்கும் மேலாக இந்த நாட்டின் சொத்துகளை அனுபவிக்க வேண்டும். பிறருடைய பங்கையும் சுரண்டிச் சாப்பிட வேண்டும் என்ற திட்டத்தில் பல சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். சாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுக்கும்போது நாட்டில் பல சாதியைச் சேர்ந்த மக்களும் தங்கள் தொகையை அறிந்து தங்களது பங்கைப் பெற ஏதுவாக இருக்கும். அரசியல்வாதிகளும், பல சாதிகளையும் தெரிந்து எல்லாச் சாதியைச் சேர்ந்த மக்களும் ஒரே சீராக எல்லாத் துறைகளிலும் முன்னேற ஏதுவாகும்" என்று எடுத்துரைப்பதுடன், சாதிவாரி கணக்கெடுப்பை நடத்துவதற்கும் குரல் கொடுக்கிறார்.

## சமூக நல்லிணக்கப் பதிவு

தேவேந்திரர்களைப் போலவே முக்குலத்தோர் என்று சொல்லப்படுகின்ற தேவர்களும் தமிழகத்தில் பரவலாக வாழ்கின்றனர். இன்று தேவேந்திரர்களுக்கும் - தேவர்களுக்குமிடையே பிரிவினையையும், மோதலையும் சில சக்திகள் தூண்டி விட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. இதனை இரு சமூகங்களும் புரிந்து கொண்டு தமிழராய் ஒன்றுபட, தமிழ்நாடு முக்குலத்தோர் சங்கத்தின் அப்போதைய மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் எம்.ஏ.தேவர் சாஸ்திரி அவர்கள் எழுதிய கடிதத்தை மள்ளர் மலர் இதழ் சமூக நல்லிணக்கம் கருதி வெளியிட்டுள்ளது. அதில் "….வெள்ளைத் தேவனும் சுந்தரலிங்க குடும்பனாரும் கட்டபொம்மனுக்கு வீரத்தின் இரு கண்களாக விளங்கியவர்கள்… ஒன்றாக வாழ்ந்த தமிழன் சங்க காலத்திலிருந்தே திட்டமிட்ட ஆதிக்கச் சூழ்ச்சிகளால் ஆயிரம் ஆயிரமாகப் பிரிந்து விட்டான். தமிழன் ஒருவனுக்கு ஒருவன் சுடர் சீவிக் கொள்ளாமல் ஆதிக்கத்தின் ஆணிவேரை வெட்டி விட்டால் தமிழன் தலை நிமிர்வான். மள்ளர்களும் உயர்வு பெறுவார்கள். அரசியல் சூழ்ச்சிகளால் தனிப்பட்ட சமுதாய ஆதிக்கவாதிகளால் மேல்மட்ட ஆதிக்கத்தால் காலம் எல்லாம் சுடர்சீவி விடப்பட்ட நாம் மேல்மட்ட ஆதிக்கத்தை உடைத்தெறிவோம். இந்த நூற்றாண்டில் முடியாவிடினும், அடுத்தவைகளிலாவது நம்முயற்சி வெற்றிப் பெறட்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ள செய்தி நம்மை சிந்திக்கத் தூண்டுகின்றது. யார் யாருடைய அரசியல்

வாழ்க்கைக்காகவோ இரு சமூகங்கள் தங்களது தொன்மைச்சிறப்பை மறந்து, உண்மை அறியாமல் மோதிக் கொண்டிருக்கின்றன என்பதையே இச்செய்தி உணர்த்துகின்றது.

## முடிவுரை

சாதியை அதன் இருத்தலை, அது செயல்படும் தளத்தை நன்கு புரிந்து கொண்டு இணக்கத்தைப் பற்றி பேசுவதுதான் உண்மையான தமிழ் தேசியமாக இருக்க முடியும். அதுவல்லாமல் சாதிய முரண்பாடுகளைப் பேசாமல், அதைக் களைய முயற்சிக்காமல் தமிழ்த் தேசியம் பேசுவது என்பது ஆதிக்கச் சாதித் தமிழ்த் தேசியமாகத்தான் இருக்க முடியும் தமிழ்நாட்டின் தொல்குடி மக்களின் உண்மையான வரலாற்றையும், பண்பாட்டையும், வெளிக்கொணர்ந்து தமிழ்ச் சாதிகளுக்கிடையே புரிதலை ஏற்படுத்தும் போதுதான் ஒற்றுமையும், தமிழ்ச் சாதிகளுக்கிடையான அரசியல் பலமும் ஏற்படும்.

## References

Parameshwari, C. (2000) Devendra Kula Vellalar Varalalurm Samuga Arasiyal Eluchiyum, Arivagam, Coimbatore, India

Gurusamy Siththar, (1995) Gnana Sekaran katturai, Mallar Malar, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License